**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.9**

**தேதி: 20.07.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **தேவராஜ்** | **ஜாதி:** | **வெள்ளாளர்** |
| **தந்தை பெயர் :** | **அழகுராஜா** | **தொழில்:** | **கிராம நிர்வாக அலுவலர்** |
| **கிராமம்:** | **விராட்டிபத்து** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மதுரை** | **வயது:** | **46/2023** |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகா, தொட்டியப்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 14.06.2010 லிருந்து 26.09.2013 வரை சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தாலுகா, கோவானூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 02.08.2012ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் கோவானூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது சிவகங்கை தாலுகா காவல் ஆய்வாளர் என்னை போனில் அழைத்து ஒரு கொலை நடந்திருப்பதாகவும் அது சம்பந்தமாக என்னை சாட்சியாக வைத்து விசாரிக்க வேண்டியுள்ளது எனக் கூறினார். நானும் என்னுடைய கிராம உதவியாளர் அம்சவள்ளி அவர்களும் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் சித்தலூர் - கரும்பாவூர் விலக்கு ரோட்டில் உள்ள பேருந்து நிறுத்தம் அருகே ஆய்வாளரும் இரு காவலர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அங்கே இருந்த எதிரிகள் செல்லதுரை மற்றும் அழகுமலை ஆகியோர்கள் எங்களை அழைத்து சென்றால் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக சொன்னார்கள். அவர்கள் இருவரும் எங்கள் முன்பாக தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்தார்கள். ஆய்வாளர் அந்த வாக்குமூலங்களை பதிவு செய்தார்கள். அதில் சாட்சிகளாக நானும் என்னுடைய கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரி செல்லதுரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.3** ஆகவும் என்னிடம் காட்டப்படும் எதிரி அழகுமலை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எங்களை அழைத்து சென்றால் சித்தலூருக்கு மேற்கே உள்ள உப்பாற்றின் மேற்கு

கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களான வேல் கம்பு, கத்தி, இரும்பு ராடு ஆகியவற்றை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறினார்கள். நாங்கள் அங்கு சென்றோம். அந்த ஆயுதங்களை எதிரி செல்லதுரை, அழகுமலை எடுத்து கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் வேல் கம்பு தான் எதிரிகள் செல்லதுரையும் அழகுமலையும் எங்கள் முன்பாக எடுத்து ஆஜர் செய்ததது ஆகும். அந்த வேல் கம்பு ஏற்கனவே அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எங்கள் முன்பு மேற்படி செல்லதுரையும் அழகுமலையும் ஆஜர் செய்த கத்தி ஏற்கனவே அ.த.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எங்கள் முன்பு எதிரிகள் செல்லதுரை, அழகுமலை ஆஜர் செய்த கம்பி அ.த.சா.பொ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சான்று பொருட்கள் மூன்றையும் மேற்படி எதிரிகள் எங்கள் முன்னிலையில் ஆஜர் செய்தார்கள். அதற்குரிய அத்தாட்சியில் எங்களிடம் கையெழுத்து பெற்றார்கள். அந்த அத்தாட்சியில் நானும் என்னுடைய கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒரு வாரம் கழித்து மீண்டும் காவல் நிலையத்திற்கு வருமாறு ஆய்வாளர் எங்களை அழைத்தார். கொலை குற்ற எதிரிகள் விசாரிக்கும் போது சாட்சிகளாக இருப்பதற்கு அழைத்தார். மதியம் நானும் கிராம உதவியாளரும் சிவகங்கை தாலுகா காவல் நிலையம் சென்றோம். அங்கு எதிரிகள் மகாதேவன் உட்பட நான்கு பேர்கள் இருந்தார்கள். அங்கு ஆய்வாளரும் சார்பு ஆய்வாளரும் மூன்று காவலர்களும் இருந்தார்கள். அப்பொழுது எதிரிகள் நால்வரிடமும் வாக்கு மூலங்கள் தனித்தனியாக பெற்றார்கள். அதில் நானும் தலையாரியும் கையெழுத்து செய்தோம். எதிரி மகாதேவன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் எதிரி பஞ்சவர்ணம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் எதிரி முத்துப்பாண்டி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி சித்தலூரில் வைத்து எதிரிகள் முன்பாக பெறப்பட்டதாகும். அந்த இரண்டு அத்தாட்சிகள் **அ.த.சா.ஆ.10, 11** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**